NATIONAL ARTS COUNCIL
SINGAPORE

# சந்தை மற்றும் பார்வையாளர் மேம்பாட்டு நிதியுதவித் திட்டம்

**பொருளடக்கம்**

1. பகுதி 1 - மேலோட்ட விவரங்கள் 2

2. பகுதி 2 - தகுதி 4

3. பகுதி 3 - விண்ணப்பம் மற்றும் பரிசீலனை முறைகள் 7

4. பகுதி 4 - உங்களுக்கு சந்தை மற்றும் பார்வையாளர் மேம்பாட்டு நிதியுதவி வழங்கப்பட்டால் 12

5. பின்னிணைப்பு A: சுய மதிப்பீட்டு அறிக்கை 14

*Document last updated: 31 March 2016*

## *பகுதி 1: மேலோட்ட விவரங்கள்*

### *சந்தை மற்றும் பார்வையாளர் மேம்பாட்டு நிதியுதவித் திட்டம் என்பது என்ன?*

தாயகத்திலும் வெளிநாட்டிலும் உங்களது கலைத்துவ முயற்சிகளுக்கு பார்வையாளர்களையும், ஆதரவாளர்களையும், துணைபுரிபவர்களையும் பெருக்கும் உங்கள் நடவடிக்கைகளுக்கு இந்த நிதியுதவித் திட்டம் ஆதரவளிக்கும்.

கலைஞர்களையும் கலைப்படைப்புகளையும் பார்வையாளர்கள் மற்றும் சந்தைகளின் முன்னிலைக்குக் கொண்டு செல்வதில், காட்சிக்கூடங்கள், படைப்பாளர்கள், கலை நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், இலக்கியப்படைப்பு வெளியீட்டாளர்கள் போன்ற இடைநிலை கலை அமைப்புகளும் பங்காற்றுகின்றன என்பதை நாங்கள் அறிகிறோம். சிங்கப்பூர் கலைஞர்களுக்கு நேரடியாக பயனளிக்கும், குறிப்பாகப் புதிய பார்வையாளர்களையும் சந்தைகளையும் சென்றடைவதற்கான இத்தகைய முயற்சிகளுக்கும் இந்த நிதியுதவி ஆதரவளிக்கிறது.

சந்தை விளம்பரத்திற்கு அப்பால், பார்வையாளர்களுடனும் ஆதரவாளர்களுடனும் உறவுமுறையை வளர்த்துக்கொள்வது அவசியம் என்றும், ஒருமுறை அனுபவிக்கப்பட்டால், கலையால் வாழ்க்கையைச் செறிவாக்கமுடியும் என்றும் உங்களைப் போலவே நாங்களும் நம்புகிறோம். நீண்ட காலகட்டத்தில், நமது கலாசாரத்தின் ஒரு பகுதியாகக் கலையைப் போற்றி மதிக்கக்கூடிய ஆழ்ந்த உணர்வை இது தூண்டும் என எதிர்பார்க்கிறோம்.

### *சந்தை மற்றும் பார்வையாளர் மேம்பாட்டு நிதியுதவித் திட்டம் எதை ஆதரிக்கிறது?*

உங்கள் திட்டங்களும் திட்டப்பணிகளும் பின்வரும் நடவடிக்கைகளில் எதையேனும் ஈடுபடுத்தலாம்:

**<u>சந்தை மற்றும் பார்வையாளர் மேம்பாட்டுத் தொடக்க முயற்சிகள்:</u>**

- பார்வையாளர் கருத்துக்கணிப்பை உள்ளிட்ட சந்தை ஆய்வு;
- கலைக் குழு/நிறுவனம், அல்லது குறிப்பிட்ட திட்டப்பணிகள்/ தயாரிப்புகள் ஆகியவற்றுக்கு வர்த்தகச்சின்னம் உருவாக்கி, அதை பிரபலப்படுத்துதல் மற்றும் சந்தை விளம்பரம் செய்தல்1;
- பொறுப்பாதரவுக்கு அல்லது பார்வையாளர் ஈடுபாட்டுக்கு வளங்களை அல்லது பொருட்களை உருவாக்கித் தயாரித்தல்;

**<u>அனைத்துலக நடவடிக்கைகள்:</u>**

- அனைத்துலக சுற்றுப்பயணங்கள்;
- அனைத்துலகக் கலைத் தளங்களில் பங்கேற்பு (எ.கா. விழாக்கள், வர்த்தகச் சந்தைகள், ஈராண்டுக்கு ஒருமுறை நடைபெறும் நிகழ்ச்சிகள், போட்டிகள், மாநாடுகள் போன்றவை);
- அனைத்துலக வருகைத் திட்டங்கள் (எ.கா. ஊடகத் துறையினர், கலைத்துறை பிரபலங்கள் போன்றோருக்கு).

**இத்திட்டத்தின்கீழ் எந்த அளவுக்கு நிதியுதவி அளிக்கப்படும்?**

விண்ணப்பதாரர் மற்றும் திட்டப்பணி வகையைப் பொறுத்து, கீழ்க்காணும் அட்டவணையில் உள்ளபடி எங்கள் நிதியுதவி வேறுபடும்:

| **விண்ணப்பதாரர் வகை** | **அனைத்து திட்டப்பணிகளுக்கும் நிதியுதவி வரம்பு (பயணம் தவிர்த்து)** | **பயணம் சார்ந்த திட்டப்பணிகளுக்கான நிதியுதவி வரம்பு** | |
|---|---|---|---|
| | | விமானக் கட்டணம் மற்றும் சரக்கு | சார்புள்ள பயணச் செலவுகள்[2] |
| தனிமனிதர்கள் மற்றும் இலாப நோக்கற்ற அமைப்புகள் | சாத்தியமான வரவுசெலவு திட்டத்தில் 50% வரை | 100% வரை | 50% வரை |
| பாரம்பரியக் கலைகள் சார்ந்த இலாபநோக்கமற்ற அமைப்புகள் | சாத்தியமான வரவுசெலவு திட்டத்தில் 70% வரை | | |
| இலாப நோக்குள்ள அமைப்புகள் | சாத்தியமான வரவுசெலவு திட்டத்தில் 30% வரை | 100% வரை | 30% வரை |
| அதிகபட்ச வரம்பு: | | ஒவ்வொரு நிதியாண்டுக்கும் 3 பயணம் சார்ந்த நிதியுதவிகள் | |
| | ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் ஒவ்வொரு நிதியாண்டுக்கும் $70,000 | | |

இலாப நோக்குள்ள அமைப்புகள் சமர்ப்பித்த திட்டப்பணிகளால் கலைஞர்களுக்கு நேரடி மேம்பாட்டு நன்மைகள் இருப்பதோடு, கலைகலை அணுகுவதையும் அதிகரித்து, காலப்போக்கில் தொழிலில் நிலைத்தன்மையும் அடையப்பட வேண்டும். அதோடு, கலையை மூலத் தொழிலாகக் கொண்ட நிறுவனங்களுக்கு நிதியுதவியில் முன்னுரிமை அளிப்போம்.
மறுமுறை விண்ணப்பம் செய்வோர் மற்றும் இலாப அதிகரிக்கும் நோக்குள்ள அமைப்புகள் ஆகியவற்றுக்கான நிதியுதவியில் ஒரு பகுதி, ஈட்டப்பட்ட அல்லது திரட்டப்பட்ட வருமானத்திற்கு இணையான நிதியாக வழங்குவதாக வடிவமைக்கப்படலாம்.

திட்டத்தின் தேவைகளையும், பின்வரும் காரணிகளையும் பொறுத்து நிதியுதவி வேறுபடும்:

- நீங்கள் சமர்ப்பித்த திட்டப்பணி சிங்கப்பூரிலும் வெளிநாட்டிலும் கலை விழிப்புணர்வையும் கலைகளை அணுகுவதையும் மேம்படுத்தக்கூடிய திறமையும் புதுமையும்;
- சிங்கப்பூரில் கலைக்குப் புதிய மற்றும் பரந்த பார்வையாளர்களுக்கு, உங்கள் படைப்பால் ஏற்படக்கூடிய தாக்கம்;
- உங்கள் யோசனைகளை நிறைவேற்றுவதில் நீங்கள் வெளிப்படுத்தும் திறமையும் ஈடுபாடும்;
- உங்கள் நியாயமான வரவுசெலவுத் திட்டம்4; மற்றும்
- தேசிய கலை மன்றத்தின் நிதியின் அளவு.

1 - ஏற்கனவே தயாரிப்பு அல்லது படைப்பு, பங்கேற்பு நிதிஉதவித் திட்டத்தில் ஆதரவு பெறாமலிருந்தால்

2 - தொடர்புடைய செலவுகள் என்பது, தங்கும் செலவு, போக்குவரத்து, அச்சடிக்கும் செலவு, விசா கட்டணம் மற்றும் மாநாடுகளின் நுழைவுக் கட்டணம் முதலியன. உங்கள் வெளிநாட்டு கூட்டாளி இந்த செலவுகளை ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் எங்கள் ஆதரவு கிடைக்கும்

3 - இலாபம் அதிகரிக்கும் நோக்கற்ற பிரிவும், இலாபம் அதிகரிக்கும் நோக்குள்ள பிரிவும் இருக்கும் ஒரு நிறுவனம் விண்ணப்பித்தால், அதிக பட்ச நிதியுதவியான $70,000, இரு பிரிவுகளுக்கும் பொருந்தும். ஒரே நிறுவனத்தின் எல்லா துணை நிறுவனங்களையும் சேர்த்து ஒரே விண்ணப்பதாரராக கருதப்படும்.

4- ஒரு நல்ல வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்க, முதல் படியே, திட்டத்தின் தேவைகளைக் கண்டறிந்து, அவற்றுக்கு ஆகும் செலவைப் புரிந்துகொள்வதே ஆகும். உங்கள் செலவுகளையும் தேவைகளையும் புரிந்து கொண்டதைக் காட்டும் ஒரு சாத்தியமான வரவு செலவுத் திட்டத்தை நீங்கள் தயாரிப்பதை நாங்கள் ஊக்குவிக்கிறோம். ஒரு சாத்தியமில்லாத, செலவுகளை அதிகப்படுத்திக் காட்டும் வரவு செலவுத்திட்டத்தால், உங்களுக்கு அதிக நிதி கிடைக்கும் என்று உத்தரவாதம் இல்லை. ஆனால், அது எதிர்மறையாக செயல்பட்டு, உங்கள் மொத்த திட்ட அறிக்கையின் உண்மை நிலையை சந்தேகிக்கும் நிலையைத் தோற்றுவிக்கும்.

1. உள்ளூர் கலைச் சூழலுக்கு ஈடுபாட்டுடன் பங்களிக்கும் சிங்கப்பூர் குடிமக்கள் அல்லது நிரந்தரவாசிகள். இவர்கள் சிங்கப்பூரிலேயே தங்கி, உள்ளூர் கலைச் சூழலுக்கு பங்களிப்பவராக இருந்தால் நல்லது (எ.கா. கலைஞர்கள், குழுக்கள்5, செயல்திறனாளர்கள், எழுத்தாளர்கள், படைப்பாளர்கள், காப்பாளர்கள், தயாரிப்பாளர்கள், கலை நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், நாடக ஆசிரியர்கள் மற்றும் கலைத்துறையில் பணிபுரியும் மற்றவர்கள்), மற்றும்

2. கலைத்துறை சார்ந்த மூலத்தொழில் நடத்துவதோடு, விண்ணப்பிக்கும்போது ACRAவில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் (வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் / தனியுரிமை நிறுவனம் / வரையறுக்கப்பட்ட பொறுப்புடனான கூட்டாண்மை / உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட நிறுவனம் (CLG) உட்பட) அல்லது சங்கங்கள் பதிவுத்துறையில் பதிவு

செய்யப்பட்ட ஒரு சங்கம்.

தலைமை விண்ணப்பதாரரும் குழுவில்/அணியில் குறைந்தது பாதி பேர் சிங்கப்பூர் குடிமக்களாக அல்லது நிரந்தரவாசிகளாகவும் இருக்கும்வரை, வெளிநாட்டவர்களுடனான கூட்டுத் திட்டப்பணிகள் சம்பந்தப்பட்ட திட்ட அறிக்கைகள் தகுதிபெறும்.

***சந்தை மற்றும் பார்வையாளர் மேம்பாட்டு நிதியுதவி திட்டத்திற்கு விண்ணப்பிக்க யார் தகுதி பெறமாட்டார்கள்?***

பின்வரும் நிலைகளில் தேசிய கலை மன்றம் உங்கள் விண்ணப்பத்திற்கு ஆதரவளிக்காது:

1) **உங்கள் குழு / நிறுவனம்**
   - மதச்சார்பு நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டிருந்தால்;
   - தேசிய கலை மன்றத்தின் முக்கிய மற்றும் ஆதார நிதியுதவித் திட்டங்களின்கீழ் தற்போது ஆதரவு பெற்றிருந்தால்;

2) **நீங்கள் சமர்ப்பித்திருக்கும் திட்டப்பணி**
   - விண்ணப்பம் செய்வதற்கு முன்பே தொடங்கப்பட்டிருந்தால்;
   - தெளிவான கலை அம்சம் இல்லாதிருந்தால், சமய நோக்கங்களை இலக்காகக் கொண்ட திட்டப்பணிகள் உட்பட;
   - சமய வழிபாட்டுத்தலத்தில் நடத்தப்பட்டால்;
   - பொதுமக்களுக்காக நடத்தப்படாவிட்டால்;
   - அறப்பணிக்கு மற்றும்/அல்லது சமூக நோக்கத்திற்கு நிதி திரட்டுவதற்காக நடத்தப்பட்டால்;
   - பள்ளி அல்லது உயர்க்கல்விக் கழகத்தின்கீழ் படைக்கப்பட்டால், அல்லது அதன் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தால்;
   - கல்வி நோக்கம் கொண்டிருந்தால்;
   - (பொருந்தினால்) கலைப் பொழுதுபோக்கு உரிமம் பெறத் தவறினால் (www.imda.gov.sg என்னும் இணையத்தளத்தில் உள்ள "உரிமப் படிவங்கள்" பகுதியைக் காண்க);
   - தேசிய கலை மன்றத்தின் முந்திய நிதியுதவித் திட்டங்களின் மதிப்பீட்டு அறிக்கைகள் முடிக்கப்படாமல் / சமர்ப்பிக்கப்படாமல் இருந்தால்;
   - தேசிய கலை மன்றத்திடம் கடன்கள் பாக்கி இருந்தால் (பாக்கியுள்ள கடன்களை அடைத்தவுடன் நீங்கள் விண்ணப்பம் செய்ய தகுதி பெறுவீர்கள்).

3) **உங்களுக்கு**

***நிதியுதவி வழிகாட்டிகள் பற்றிய ஒரு குறிப்பு***

- கலைகளில், பல்வேறு கருத்துக்கள் மற்றும் ஒரு திறந்த சரிசமனான கருத்துப் பரிமாற்றத்தை நாங்கள் கொண்டாடினாலும், பொதுமக்கள் நிதியை விநியோகிக்கும் ஒரு சட்டபூர்வமான அமைப்பாக இருப்பதால், கீழ்க்கண்டவாறு இல்லாத திட்ட அறிக்கைகளுக்குதான், தேசிய கலை மன்றம், நிதியுதவி அளிப்பதில் முன்னுரிமை

கொடுக்கும்.

- பொதுமக்களால் விரும்பத்தகாததாகக் கருதப்படும் வாழ்க்கைமுறைகளை ஆதரித்தல் அல்லது ஊக்குவித்தல்;
- இனம் அல்லது சமய அடிப்படையில் தனிமனிதரையோ, குழுவினரையோ அல்லது தனிமனிதப் பிரிவினரையோ இழிவுபடுத்துதல் அல்லது தரக்குறைவாக்குதல், அல்லது நமது பல கலாசார, பல சமய சமுதாயத்தில் பூசல் அல்லது கருத்து வேறுபாட்டை உருவாக்குதல்;
- அரசாங்கம், பொது அமைப்புகள் ஆகியவற்றின் அதிகாரத்தை அல்லது சட்டபூர்வ நிலையை நிலைகுலைத்தல், அல்லது நாட்டின் இடர்காப்புக்கு அல்லது நிலைத்தன்மைக்கு ஆபத்து ஏற்படுத்துதல்.

* தேசிய கலை மன்ற நிதியுதவிக்கு நீங்கள் தகுதி பெறுகிறீர்களா இல்லையா என்பது உங்களுக்கு உறுதியாகத் தெரியாவிட்டால், https://www.nac.gov.sg/pages/contactUs.html என்னும் இணையப்பக்கத்தில் பட்டியலிடப்பட்டிருக்கும் தேசிய கலை மன்ற அதிகாரிகளில் ஒருவருடன் தயவு செய்து பேசவும்

5- முறைப்படியில்லாத கூட்டங்கள், ஒரு நபரையோ அல்லது சட்டபூர்வமாக நிறுவப்பட்ட ஒரு நிறுவனத்தையோ, கூட்டத்தின் சார்பில் சட்டபூர்வமான மற்றும் நிதி சம்பந்தமான பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு நியமிக்க வேண்டும்.

# பகுதி 3: விண்ணப்பம் மற்றும் பரிசீலனை முறைகள்

**சந்தை மற்றும் பார்வையாளர் மேம்பாட்டு நிதியுதவித் திட்டத்திற்கு எவ்வாறு விண்ணப்பம் செய்வது?**

விண்ணப்பப் படிவத்தையும் வரவுசெலவுத் திட்டத்தையும் தேசிய கலை மன்றத்தின் இணையத் தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யவேண்டும்.

தயவுசெய்து உங்கள் விண்ணப்பத்தை **NAC_Marketaudiencedevt_grant@nac.gov.sg** என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.
நீங்கள் விரும்பினால், உங்கள் விண்ணப்பம் மற்றும் ஆதரவுப் பொருட்கள் அனைத்தையும் ஒரே உறையில் வைத்து, பின்வரும் முகவரிக்குத் தபாலில் அனுப்பலாம்:

National Arts Council
Market & Audience Development Grant *[தயவுசெய்து எந்தவகை நிதியுதவித் திட்டம் என்பதைக் குறிப்பிடவும்]*
90 Goodman Road
Blk A #01-01
Singapore 439053

மாறாக, உங்கள் விண்ணப்பத்தை தேசிய கலை மன்ற வரவேற்புப் பகுதியில் திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை, காலை 9 முதல் நண்பகல் 12 மணிவரையிலும் அல்லது மதியம் 2 மணி முதல் மாலை 5 மணிவரையிலும் நீங்கள் நேரில் சமர்ப்பிக்கலாம்.

உங்கள் விண்ணப்பத்தை அனுப்புவதற்குமுன், பின்வருபவை இணைக்கப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தவும்:

- நிதியுதவித் திட்ட விண்ணப்பப் படிவம்
- சம்பந்தப்பட்ட முக்கிய தரப்பினரின் சுய விவரத்தொகுப்பு
- திட்ட அறிக்கையில் உள்ள படைப்பின் மாதிரி வடிவங்கள்
- வரவுசெலவுத் திட்டம்

**நீங்கள் எந்த தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்?**

சந்தை மற்றும் பார்வையாளர் மேம்பாட்டு நிதியுதவிக்கு ஆண்டுக்கு ஆறு முறை விண்ணப்பம் செய்யலாம். உங்கள் விண்ணப்பத்தைத் தயார்செய்யும்போது நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய முக்கிய தேதிகளும் காலகட்டங்களும் பின்வரும் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளன:

| இந்தத் தேதியன்று அல்லது பிறகு தொடங்கும் திட்டங்கள்: | விண்ணப்பத்துக்கான கடைசி தேதி | முடிவு அறிவிப்பு |
|---|---|---|
| 15 ஜூலை - 14 செப்டம்பர் | 15 ஏப்ரல் | ஜூன் 15 |
| 15 செப்டம்பர் - 14 நவம்பர் | 15 ஜூன் | ஆகஸ்ட் 15 |
| 15 நவம்பர் - 14 ஜனவரி | 15 ஆகஸ்ட் | அக்டோபர் 15 |
| 15 ஜனவரி - 14 மார்ச் | 15 அக்டோபர் | டிசம்பர் 15 |
| 15 மார்ச் - 14 மே | 15 டிசம்பர் | பிப்ரவரி 15 |
| 15 மே - 14 ஜூலை | 15 பிப்ரவரி | ஏப்ரல் 15 |

**மேலிருக்கும் அட்டவணையில் உள்ள 'விண்ணப்பம் நிறைவடையும் தேதி'க்கு முன்னர் எப்போது வேண்டுமானாலும் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம். அனைத்து விண்ணப்பங்களும் இரவு 11.59 மணிக்குள் எங்களுக்குக் கிடைக்கவேண்டும். தாமதமான விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டா.**

**பங்காளிகள்/கூட்டாளிகள் 'ஏற்புக் கடிதம்' மூலம் உறுதிப் படுத்துவதற்குக் காத்திருந்தால் 'விண்ணப்பம் நிறைவடையும் தேதி'க்கு முன்னர் விண்ணப்பத்தை சமர்ப்பித்து விட்டு எதற்காகக் காத்திருக்கிறீர்கள் என்று தெரிவித்து விட்டு, பின்னர் உரிய ஆவணம் கிடைக்கப்பெற்ற பின்னர் தேசிய கலை மன்றத்தின் அதிகாரிகளிடம் அளிக்க வேண்டும்.**

***உங்களுக்குக் கேள்விகள் இருந்தால் யாருடன் தொடர்பு கொள்வது?***

உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், அல்லது உங்கள் விண்ணப்பத்தைப் பற்றி விரிவாகக் கலந்து பேச விரும்பினால், https://www.nac.gov.sg/pages/contactUs.html என்னும் இணையதளத்தில் பட்டியலிடப் பட்டிருக்கும் தேசிய கலை மன்ற அதிகாரிகளில் யாரேனும் ஒருவருடன் தயவு செய்து பேசவும்.

***நீங்கள் விண்ணப்பம் செய்த பிறகு என்ன நடக்கும்?***

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தையும் தேசிய கலை மன்றம் தீவிரமாகப் பரிசீலிக்கும். எங்களுக்கு ஏதேனும் மேல்விவரங்கள் தேவைப்பட்டால், உங்கள் தலைமை

விண்ணப்பதாரரை தொடர்பு கொள்வோம். உங்கள் விண்ணப்பத்தை கலை மன்றத்திற்கு உள்ளேயே இருக்கும் மதிப்பாய்வுக் குழுவினர் அல்லது உள்ளேயும் மற்றும் வெளியில் உள்ள மதிப்பாய்வாளர்களைக் கொண்ட ஒரு குழு பரிசீலிக்கும். வெளியில் உள்ள மதிப்பாய்வாளர்கள் அமர்த்தப்பட்டால், தொழில்துறை ஆலோசகர்கள், வல்லுநர்கள், கலைத்துறையினர் ஆகியோர் தகுதி விதிகளின் அடிப்படையில் தகுதிபெறும் விண்ணப்பங்களை பரிசீலித்து, தங்களது கருத்துக்களை அளிப்பார்கள். மன்றத்திடம் சமர்ப்பிக்கப்படும் திட்ட அறிக்கைகள் அனைத்தும் அந்தரங்கமாகக் காக்கப்படும் என்று உறுதியளிக்கிறோம். அதேபோல, எங்கள் மதிப்பாய்வுக் குழுவினரும் உங்கள் திட்ட அறிக்கைகளை பரிசீலனை செய்வதற்கு முன்பாக அந்தரங்க ஒப்பந்தங்களால் கட்டுப்படுத்தப்படுவார்கள்.

***உங்கள் விண்ணப்பம் எவ்வாறு பரிசீலிக்கப்படும்?***

எங்கள் பரிசீலனை பின்வரும் விதிகளால் வழிகாட்டப்படும்:

| பரிசீலனை விதிகள் | விகிதம் |
|---|---|
| **<u>புதிய பார்வையாளர்களையும் சந்தைகளையும் உருவாக்குவதில் நடவடிக்கையின் தாக்கம்</u>**<br>• விழிப்புணர்வை, அணுகலை, பயனீட்டை அதிகரித்து, விண்ணப்பதாரரின் கலைத்துவப் பணியின் / நிறுவனத்தின் ஒட்டுமொத்த சாத்தியம், நிலைத்தன்மை ஆகியவற்றுக்கு, நடவடிக்கை பங்களிக்குமா?<br>• நிறுவன அளவிலான சந்தை மற்றும் பார்வையாளர் மேம்பாட்டு முனைப்புகள்:<br>• திட்டப்பணியின் மூலம் எதைச் சாதிக்க விரும்புகிறோம் என்பது குறித்து விண்ணப்பதாரருக்கு தெளிவான யோசனை இருக்கிறதா? எ.கா. தெளிவாக வரையறுக்கப்பட்ட ஆய்வுக் கேள்விகள், வர்த்தகச் சின்னத்தை உருவாக்கிப் பிரபலப்படுத்துதல் மற்றும் ஆலோசனை எதிர்பார்ப்புகள்.<br>• திட்டப்பணியின் முடிவுகளைப் பயன்படுத்தி தங்களது சந்தை மற்றும் பார்வையாளர் மேம்பாட்டு அணுகுமுறையை வடிவமைப்பதற்கு விண்ணப்பதாரரிடம் திட்டம் இருக்கிறதா?<br>• விசுவாசமான ரசிகர் கூட்டத்தை உருவாக்குவதற்கு உதவியாக வலுவான வர்த்தகச்சின்னம், அடையாளம் ஆகியவற்றை விண்ணப்பதாரர் நிலைநாட்டுவதற்குத் திட்டப்பணி உதவுமா? குறிப்பிட்ட திட்டப்பணி சார்ந்த சந்தை மற்றும் பார்வையாளர் மேம்பாட்டு முனைப்புகள்:<br>• விண்ணப்பதாரருக்குத் தான் குறிவைக்கும் பார்வையாளர்கள் யார் என்பது புரிகிறதா?<br>• குறிவைக்கப்படும் இந்தப் பார்வையாளர்களைத் திட்டப்பணி சிறந்த முறையில் | 80% |

| | |
|---|---|
| எட்டுகிறதா?<br>• விண்ணப்பதாரரின் சந்தை விளம்பர உத்திகள் எவ்வளவு புதுமையாகவும் சிக்கனமானதாகவும் இருக்கிறது?<br>• வழக்கமாகக் கலையில் ஈடுபடாதவர்கள் உள்ளிட்ட புதிய பார்வையாளர்களை விண்ணப்பதாரர் அணுகவும், கலை வடிவம் / குழு குறித்து விழிப்புணர்வை உருவாக்கவும் திட்டப்பணி உதவுகிறதா?<br><br>**<u>வருகைத் திட்டங்கள் உள்ளிட்ட அனைத்துலக நடவடிக்கைகள்:</u>**<br>• தரமான கலைத்துவத் தகுதிநிலை கொண்ட நிகழ்ச்சியில் / விழாவில் / இடத்தில் விண்ணப்பதாரர் படைக்கிறாரா?<br>• விண்ணப்பதாரரின் அனைத்துலகச் சந்தை எட்டுதலை அதிகரிக்கவும், உங்கள் கலைக்கு / குழுவுக்கு ஆழ்ந்த பாராட்டை ஈர்க்கவும் திட்டப்பணி உதவுகிறதா?<br>• சிங்கப்பூர் படைப்புகள் மற்றும் கலைஞர்களின் நற்பெயரை உயர்த்த திட்டப்பணி உதவுகிறதா?<br>• இந்தத் திட்டப்பணிக்குப் பிறகும் இந்தச் சந்தையைத் தொடர்ந்து விரிவுபடுத்திட விண்ணப்பதாரர் திட்டமிடுகிறாரா?<br><br>**குறிப்பு: பின்வருவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்:**<br>• ஆசிய பசிபிக், ஐரோப்பா, வட மற்றும் தென் அமெரிக்கா ஆகியவற்றின் முக்கிய கலைத்துறை தலைநகரங்களிலும் நகரங்களிலும் கலை உலா செல்லும் அல்லது பணிபுரியும் விண்ணப்பதாரர்கள்<br>• அனைத்துலக அரங்கில் உயர் மதிப்புள்ள கலை நிகழ்ச்சிகளில் முதல்முறையாக இடம்பெறும் சிங்கப்பூர் கலைஞர்கள் / படைப்புகள் சம்பந்தப்பட்ட தகுதிபெறும் விண்ணப்பங்கள். | |
| **<u>திட்டப்பணியை நிறைவேற்றக்கூடிய ஆற்றலும் பொறுப்புணர்ச்சியும்</u>**<br>**கலைத்துவத் திறமை:**<br>• கலைத்துவச் சாதனையில் விண்ணப்பதாரருக்கு மற்றும்/அல்லது குழுவுக்கு வலுவான படைப்புச் சாதனை இருக்கிறதா?<br>• சிங்கப்பூர் மற்றும்/அல்லது அனைத்துலக கலைச் சூழலில் விண்ணப்பதாரரின் படைப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளதா?<br>• கலை வடிவத்தைச் சிங்கப்பூரில் மேம்படுத்தி முன்னேற்றக்கூடிய ஆற்றலும் பொறுப்புணர்ச்சியும் விண்ணப்பதாரருக்கு இருக்கிறதா?<br><br>**திட்டப்பணி நிர்வாகத் திறன்கள்:**<br>*<u>செயலாக்கம்:</u>* | 20% |

| | |
|---|---|
| • திட்ட அறிக்கை, சந்தைப் படுத்தும் திட்டத்தை நன்றாக செயலாக்கத் தேவையான வளங்களையும் கூட்டாளிகளையும் பற்றி நன்கு சிந்தித்து, கவனமாக திட்டமிடப்பட்டுள்ளதா?<br>• திட்டப்பணியை நிறைவேற்றக்கூடிய திறமையும் அனுபவமும் விண்ணப்பதாரருக்கு இருக்கிறதா?<br>நிதிநிலை:<br>• நியாயமான வரவு, செலவுக் கணிப்புகள் கொண்ட வலுவான திட்டம் விண்ணப்பதாரருக்கு இருக்கிறதா; வரவுசெலவுக்குள் திட்டப்பணியை நிறைவேற்றக்கூடிய நியாயமான உத்தேசக்கணிப்பு இருக்கிறதா?<br>• திட்டப்பணியின் நிதிநிலை திறம்பட நிர்வகிக்கப்படுவதை உறுதி செய்யக்கூடிய அறிவாற்றலும் திறன்களும் விண்ணப்பதாரருக்குக் கிடைக்கிறதா? | |

# பகுதி 4: உங்களுக்கு சந்தை மற்றும் பார்வையாளர் மேம்பாட்டு நிதியுதவி வழங்கப்பட்டால்

உங்கள் விண்ணப்பம் வெற்றிபெற்றால், வாழ்த்துக்கள்! பின்வருபவற்றைக் கொண்டிருக்கும் ஒரு வழங்கீட்டுக் கடிதம் உங்களுக்குக் கிடைக்கும்:

1. நிதியுதவியின் விதிகளும் நிபந்தனைகளும்
2. நீங்களும் தேசிய கலை மன்றமும் ஒத்துக்கொண்ட செயலாக்க இலக்குகளும் எதிர்பார்ப்புகளும்

வெற்றிபெறாத விண்ணப்பதாரர்கள் இதே காலகட்டத்தில் **தகவல் தெரிவிப்புக் கடிதம்** பெறுவார்கள்.

வழங்கீட்டுக் கடிதம் அனுப்பப்பட்ட தேதியிலிருந்து இரண்டு வாரங்களுக்கு (இதற்கு மாறாக நாங்கள் உங்களுக்கு எழுதியிருந்தாலொழிய) வழங்கீடு நடப்பிலிருக்கும். இந்தக் காலகட்டத்திற்குள் வழங்கீட்டை நீங்கள் ஏற்காவிட்டால், வழங்கீடு காலாவதியாகிவிடும்.

***உங்கள் நிதியுதவியை எப்படிப் பெறுவீர்கள்?***

நிதியுதவித் தொகையின் அடிப்படையில், உங்கள் நிதியுதவி, கீழ்க்காணும் அட்டவணைப்படி, இரண்டு அல்லது மூன்று பகுதிகளில் வழங்கப்படும்:

| நிதியுதவி அளவு | முதல் பகுதி | 2வது பகுதி | 3வது பகுதி |
|---|---|---|---|
| $10,000க்குக் குறைவு | நிதியுதவி ஏற்கப்பட்டவுடன் நிதியுதவித் தொகையில் 80% | திட்டப்பணியை வெற்றிகரமாக முடித்து, மதிப்பாய்வு அறிக்கையை சமர்ப்பித்தவுடன் நிதியுதவித் தொகையில் 20% | - |
| $10,000 அல்லது அதைவிட அதிகம் | நிதியுதவி ஏற்கப்பட்டவுடன் நிதியுதவித் தொகையில் 50% | திட்டப்பணியை வெற்றிகரமாக முடித்தவுடன் நிதியுதவித் தொகையில் 30% | மதிப்பீட்டு அறிக்கையையும் சான்றளிக்கப்பட்ட கணக்கு அறிக்கையையும்7 சமர்ப்பித்தவுடன் நிதியுதவித் தொகையில் 20% |

உங்களது அல்லது உங்கள் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட வங்கிக் கணக்கில் நிதி சேர்க்கப்படும்.

7 - $20,000 மற்றும் அதற்கு மேற்பட்ட நிதியுதவிகளுக்கு மட்டுமே, உங்கள் கணக்கு அறிக்கை நிபுணத்துவக் கணக்காளரால் சான்றளிக்கப்பட்டிருப்பது அவசியம். இந்த கணக்கு அறிக்கைக்கு சான்றளிக்கத் தேவையான கட்டணங்களையும் உங்கள் வரவுசெலவுத் திட்டத்தில் சேர்க்கலாம்.

### *நீங்கள் என்ன நிறைவேற்றவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது?*

நீங்கள் வெற்றிபெற்றால், உங்களது திட்ட அறிக்கையில் உள்ள திட்டப்பணிகளை, குறிப்பிட்டுள்ள காலகட்டத்தில் நிறைவேற்ற வேண்டுமென உங்களிடம் எதிர்பார்க்கப்படும்.

### *உங்கள் முன்னேற்றத்தை தேசிய கலை மன்றம் எவ்வாறு மதிப்பிடும்?*

உங்கள் திட்டப்பணி முடிவடைந்ததும், சுய மதிப்பீட்டு அறிக்கையை (பின்னிணைப்பு A பார்க்கவும்) சமர்ப்பிக்குமாறு உங்களிடம் கேட்டுக் கொள்ளப்படும். நீங்கள் அதுவரை சாதித்ததையும், நீங்கள் சந்தித்த சவால்களையும் ஆராய்வதற்கு இது உதவும். இத்துடன், உங்கள் வருமானம், செலவினம் ஆகியவற்றின் கணிப்பையும் உண்மை நிலவரத்தையும் நீங்கள் சமர்ப்பிக்கவேண்டும். $20,000 மற்றும் அதற்கு மேற்பட்ட நிதியுதவிகளுக்கு, உங்கள் கணக்கு அறிக்கை நிபுணத்துவக் கணக்காளரால் சான்றளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

தொடர்ச்சியான திட்டப்பணிகளுக்கு, ஒவ்வொரு திட்டப்பணியின் முடிவிலும் உங்களை சந்தித்து அதன் வெற்றியை பரிசீலித்த பிறகே, அடுத்தடுத்த பதிப்புக்கு நிதியுதவி புதுப்பிக்கப்படுமா என பரிசீலிக்கப்படும்.

### *உங்கள் படைப்பில் உன்னத நிலை அடைவதற்கு தேசிய கலை மன்றம் வேறு எப்படி உதவமுடியும்?*

பார்வையாளர்களை உருவாக்குவதை இலக்காகக் கொண்டு பற்பல திட்டங்களில் தேசிய கலை மன்றம் ஈடுபட்டிருக்கிறது. பள்ளிகளிலும், அலுவலகங்களிலும், பரந்த சமூகத்திலும் கலைகளை அணுகுவதை விரிவுபடுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்ட கலைக் கல்வித் திட்டம், அனைவருக்கும் கலை, பணியிடத்தில் கலை, சில்வர் கலைத் திட்டங்கள் ஆகியவை இவற்றுள் அடங்கும். நமது குறிக்கோள்கள் ஒத்திருந்தால், தேவையான தொடர்புகளையும் இணைப்புகளையும் மகிழ்ச்சியுடன் உருவாக்கித்தருவோம்.

# பின்னிணைப்பு A: சுய மதிப்பீட்டு அறிக்கை

உங்கள் திட்டப்பணி நிறைவடைந்ததும், எங்களுடனான உங்களின் திட்டப்பணி பற்றிய மதிப்பீட்டுகளையும் எண்ணங்களையும் எங்களுடன் பகிர்ந்துகொள்வதை நாங்கள் விரும்புகிறோம். பின்வரும் கேள்விகளை நீங்கள் வழிகாட்டியாகப் பயன்படுத்த விரும்பலாம். சாத்தியப்பட்டால், தயவு செய்து பின்வருபவற்றில் எதையேனும் இணைக்கவும்:

புகைப்படங்கள் / ஒலிப்பதிவுகள்

- ஊடக நறுக்கல்கள் / செய்தித்தாள் மதிப்பாய்வுகள்

**சந்தை மற்றும் பார்வையாளர் மேம்பாடு**

*(உங்கள் திட்டப்பணிக்குப் பொருந்தும் பகுதிகளை மட்டும் நிரப்பவும்)*

**<u>நிறுவன அளவிலான முனைப்புகளுக்கு:</u>**

- இந்தத் திட்டப்பணியை மேற்கொள்வதற்கான உங்கள் நோக்கங்கள் என்ன, மற்றும் பலன்களை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்?

**<u>திட்டப்பணி சார்ந்த முனைப்புகளுக்கு:</u>**

| பொருந்துமாயின் / இருக்குமாயின் | கணிப்பு | உண்மை நிலை |
|---|---|---|
| மொத்த வருகையாளர்கள் | | |
| விற்பனையான நுழைவுச்சீட்டுகள் | | |
| வருகையளிப்பு விழுக்காடு | | |

- முந்திய திட்டப்பணிகளோடு ஒப்பிடுகையில் உங்கள் பார்வையாளர் வருகை / விற்பனை பெருகியிருக்கிறதா?
- சந்தை மற்றும் பார்வையாளர் மேம்பாட்டுக்கு உங்கள் முனைப்புகள் பலனளித்தனவா? எது பலனளித்தது, எது பலனளிக்கவில்லை? எதை இன்னும் சரிவரச் செய்திருக்கலாம்?

**<u>வருகைத் திட்டங்கள் உள்ளிட்ட அனைத்துலக நடவடிக்கைகளுக்கு:</u>**

| **பொருந்துமாயின் / இருக்குமாயின்** | **கணிப்பு** | **உண்மை நிலை** |
|---|---|---|
| மொத்த வருகையாளர்கள் | | |
| விற்பனையான நுழைவுச்சீட்டுகள் | | |
| வருகையளிப்பு விழுக்காடு | | |

- உங்கள் திட்டப்பணிக்குப் பார்வையாளர்களின் ஆதரவு எப்படி இருந்தது?
- இந்தத் திட்டப்பணி உங்களுக்கு எவ்வாறு பலனளித்திருக்கிறது (எ.கா. உங்களது அனைத்துலகத் தரநிலையைக் கூட்டியிருக்கிறது, புதிய வாய்ப்புகளை உருவாக்கியிருக்கிறது)?

**நிதியுதவி குறித்து உங்கள் கருத்து**

- உங்கள் சந்தை மற்றும் பார்வையாளர் மேம்பாட்டு முனைப்புகளுக்கு ஆதரவளிக்க தேசிய கலை மன்றம் எந்தெந்த வழிகளில் மேலும் சிறப்பான முறையில் பங்காற்றமுடியும்?